ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2346/14 - 2023 අගෝස්තු මස 21 වැනි සඳුදා - 2023.08.21

2346/14 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/UP/LND/1/UMAYA/THALPI/02-I.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/IR/58.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் ஊவா பரணகம பிரதேச செயலாளர் பிரிவில் கம்பஹா கோறளையின் சிறு பிரிவிலே வேதலாவ கிராம அலுவலர் பிரிவில் கலனியகம இறுதி கிராம வரைபு இல. 392 இல் மேலதிக இல. 01 இல் பத்திர இல. 02 கொண்ட காணித்துண்டுகள் 02 இற்காக தயாரிக்கப் பட்ட 2023.05.30 ஆந் திகதியுடைய நில அளவையாளர் நாயகம் அவர்களின் இல. B/UVP/2021/284 கொண்ட ஆரம்ப வரைபில் காட்டப்பட்டுள்ள 0.9096 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்க் குறிப்பிடப்படும் 02 காணித்துண்டுகளின் விபரங்கள்:

**01. துண்டு இல. 175**

காணியின் பெயர் : மீகஹயாய; விபரம் : வயல்; உரிமை கோருபவர்: கலனிஹ மஸ்பன்னவில் வசிக்கும் திரு. களனிய பண்டாரலாகே பொடி மஹத்தயா; விஸ்தீரணம் : 0.1191 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 222**

காணியின் பெயர் : வேவெல்தலாவயாய; விபரம் : காடு; உரிமை கோருபவர்: கலனிஹ மஸ்பன்னவில் வசிக்கும் திரு. களனிய பண்டாரலாகே இந்திரபால; விஸ்தீரணம் : 0.7905 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில்

1A - G 40180 — 09 (2023/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அந்த அந்த காணித் துண்டு இலக்கத்திற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் நியமிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு ஊவா பரணகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

| திகதி | காணித் துண்டு இலக்கம் | நேரம் |
|---|---|---|
| 2023.10.25 | 175 மற்றும் 222 | மு.ப. 9.30 மணி |

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என்.ஜீ.எம்.எஸ். குமார,
பிரதேச செயலாளர்,
ஊவா பரணகம.

பிரதேச செயலகம்,
ஊவா பரணகம,
2023, ஓகத்து 16.

EOG 08 - 0229